வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி : 13.05.2026 – புதன் கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

பிரதமர் திரு. நரேந்திர மோடி, தனது பாதுகாப்பு வாகனங்களின் எண்ணிக்கையை குறைக்க உத்தரவிட்டுள்ளார்.

பிரிக்ஸ் உறுப்பு நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாடு நாளை, புதுடெல்லியில் தொடங்குகிறது.

தமிழ்நாட்டில், திரு. ஜோசப் விஜய் தலைமையிலான அரசு, நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றது.

புதுச்சேரி முதலமைச்சராக என்.ஆர்.காங்கிரஸ் தலைவர் திரு. ரங்கசாமி, 5ஆவது முறையாக இன்று பதவியேற்றார்.

***மோடி -1 (2)***

பிரதமர் திரு. நரேந்திர மோடி, தனது பாதுகாப்பு வாகனங்களின் எண்ணிக்கையை குறைக்க உத்தரவிட்டுள்ளார். இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு…

***மோடி -2 (17)***

மேற்காசிய போர் சூழலால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை சமாளிக்கவும், இறக்குமதி செய்யப்படும் எரிபொருளின் அளவை குறைக்கும் வகையிலும், அண்மையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு 7 வேண்டுகோள்களை விடுத்திருந்தார். அதனை செயல்படுத்தும் விதமாக தற்பொழுது அவரே முன் உதாரணமாகத் திகழ்கிறார்.

அண்மையில் குஜராத் மற்றும் அசாம் மாநிலங்களுக்கு பயணம் மேற்கொண்ட பிரதமர், தனது பாதுகாப்பு வாகனங்களின் எண்ணிக்கையை கணிசமாக குறைத்துள்ளார். இருப்பினும், சிறப்பு பாதுகாப்பு படை

எனப்படும் SPG விதிமுறைகளின்படி, பிரதமருக்கான அனைத்து அத்தியாவசிய பாதுகாப்பு ஏற்பாடுகளும் முழுமையாக பின்பற்றப் படுகின்றன.

மேலும், மின்சார வாகனங்களை பயன்படுத்தவும் பிரதமர் திரு. மோடி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி உள்ளார். பிரதமரின் இந்த நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, தனது பாதுகாப்பு வாகனங்களின் எண்ணிக்கையை பாதியாக குறைத்துள்ளார். திரு. அமித் ஷாவின் இந்த நடவடிக்கை எரிபொருள் சிக்கனத்திற்கு பெரும் பங்களிப்பை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

***பிரிக்ஸ் மாநாடு (7)***

பிரிக்ஸ் உறுப்பு நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாடு நாளை, புதுடெல்லியில் தொடங்குகிறது. வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தலைமையில், 2 நாட்கள் இந்த மாநாடு நடைபெறுகிறது. பிரிக்ஸ் மாநாட்டில் கலந்து கொள்ளும் வெளியுறவு அமைச்சர்களை சந்தித்துப் பேச பிரதமர் திரு. நரேந்திர மோடி திட்டமிட்டுள்ளார். இதற்கிடையே, இம்மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தோனேஷிய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Sugiono இன்று காலை புதுடெல்லி வந்தடைந்தார்.

***சிறுபான்மையினர் மாநாடு (13)***

மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் அமைச்சகம் சார்பில், செயற்கை நுண்ணறிவு மூலம் சிறுபான்மையினர் நலன் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற தலைப்பில் நாளை புதுடெல்லியில் தேசிய மாநாடு நடைபெற உள்ளது. விக்சித் பாரத் தொலைநோக்குப் பார்வையின் கீழ், சிறுபான்மையினருக்கான தொழில்நுட்பம் சார்ந்த நலத்திட்டங்களை ஊக்குவிப்பது குறித்து, இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளது.

மேலும் அனைவரையும் உள்ளடக்கிய நிர்வாகத்தை வலுப்படுத்தவும், அரசின் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் உரியவர்களை சென்றடைவதை

உறுதிப்படுத்துவது குறித்தும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளது. மத்திய – மாநில அரசுகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை அதிகரித்தல், சிறந்த நிர்வாக நடைமுறைகளை பகிர்ந்து கொள்ளுதல் போன்றவை குறித்த விவாதங்களுக்கும் இம்மாநாட்டில் முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது.

***ஆன் லைன் வினாடி – வினா (12)***

வளர்ச்சிக்கான எழுச்சிமிகு கிராமங்கள் என்ற நிகழ்ச்சிக்காக இளைஞர்களை தேர்வு செய்யும் வகையில், தேசிய அளவில், ஆன் லைன் மூலம் வினாடி-வினா போட்டியை நடத்துவது குறித்து மத்திய அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது. மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகமும், மத்திய உள்துறை அமைச்சகமும் இணைந்து இந்த வினாடி – வினா போட்டியை நடத்துகின்றன. மை பாரத் இணையதளம் மூலமாக நடைபெறும் இந்த வினாடி-வினாவில், இம்மாதம் 20ஆம் தேதி வரை கலந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு உடல் தகுதி பரிசோதனை நடத்தப்பட்டு, 500 பேர் தேர்ந்தெடுக்கப்படுவர் என்றும், இவர்கள் ஜுன் மாதம் நடைபெற உள்ள வளர்ச்சிக்கான எழுச்சி மிகு கிராமங்கள் என்ற நிகழ்ச்சியில் பங்கு பெறுவார்கள் என்றும் மத்திய அரசு அறிவித்துள்ளது.

***விஜய் – வெற்றி -1 (18)***

தமிழ்நாட்டில், திரு. ஜோசப் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழக அரசு, சட்டமன்றத்தில் இன்று நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றது. முன்னதாக, இன்று சட்டப்பேரவையில், முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் தமது தலைமையிலான தவெக அரசின்மீது நம்பிக்கைக் கோரும் அரசினர் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

அதனைத் தொடர்ந்து, அரசுக்கு ஆதரவாகவும், அரசை எதிர்த்தும், உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை முன் வைத்தனர். நம்பிக்கை வாக்கெடுப்பில், திமுக உறுப்பினர்கள் பங்கேற்க மாட்டார்கள் என்று அறிவித்த எதிர்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின், கட்சி உறுப்பினர்களுடன் வெளிநடப்புச் செய்தார்.

அதன் பிறகு, சட்டப்பேரவைத் தலைவர் திரு. J.C.D பிரபாகர் எண்ணிக்கை அடிப்படையிலான நம்பிக்கை வாக்கெடுப்பிற்கு உத்தரவிட்டார். நம்பிக்கை வாக்கெடுப்பில் 171 உறுப்பினர்கள் கலந்து கொண்ட நிலையில், தவெக அரசுக்கு ஆதரவாக 144 சட்டமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தனர். 22 சட்டமன்ற உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர்.

அதிமுகவின் திரு. எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான 22 உறுப்பினர்கள் அரசுக்கு எதிராக வாக்களித்த நிலையில், அக்கட்சியைச் சேர்ந்த 25 உறுப்பினர்கள் தவெக அரசுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

***விஜய் – வெற்றி - 2 (7)***

அதனைத் தொடர்ந்து, முதலமைச்சரின் உரைக்குப் பின்னர், பேரவையை மறு தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைப்பதாக, சட்டப்பேரவைத் தலைவர் திரு. J.C.D பிரபாகர் அறிவித்தார்.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில், முதலமைச்சர் திரு. விஜய் தலைமையிலான தவெக, 108 இடங்களை மட்டுமே பெற முடிந்ததால், சட்டமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்று தமிழக ஆளுநர் திரு. R.V. அர்லேகர் உத்தரவிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

***ஏர் இண்டியா (8)***

விமான எரிபொருள் விலை உயர்வு காரணமாக ஏர் இண்டியா தனது சர்வதேச விமான சேவைகளை குறைக்கவும், சில வெளிநாட்டு விமான சேவைகளை தற்காலிகமாக நிறுத்த வைக்கவும் முடிவு செய்துள்ளது. டெல்லி – சிகாகோ, மும்பை – நியூயார்க், டெல்லி – ஷாங்காய், சென்னை – சிங்கப்பூர் உள்ளிட்ட சில சர்வதேச விமானச் சேவைகளை தற்காலிகமாக நிறுத்தப்பட உள்ளதாக ஏர் இண்டியா அறிவித்துள்ளது. மேலும், இந்த ஆண்டு ஜுன் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை சர்வதேச விமானச் சேவைகளை முறைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவித்துள்ளது.

*ரங்கசாமி பதவியேற்பு – 1 (13)*

புதுச்சேரி முதலமைச்சராக என்ஆர்காங்கிரஸ் தலைவர் திரு. ரங்கசாமி, 5ஆவது முறையாக இன்று பதவியேற்றார். மக்கள் மாளிகையில் இன்று காலை நடைபெற்ற விழாவில், துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமிக்கு பதவிப் பிரமாணமும், ரகசிய காப்பு உறுதி மொழியும் செய்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, என்ஆர்காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. மல்லாடி கிருஷ்ணாராவ், பிஜேபியைச் சேர்ந்த திரு. நமச்சிவாயமும், அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர். இந்த பதவியேற்பு விழாவில், பிஜேபி தேசிய தலைவர் திரு. நிதின் நபின், பிஜேபி தேசிய பொதுச்செயலாளர் திரு. பி.எல். சந்தோஷ், அக்கட்சியின் மாநிலத் தலைவர் திரு. வி.பி. ராமலிங்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

புதுச்சேரியின் முதலமைச்சராக 5ஆவது முறையாக பதவியேற்ற திரு. ரங்கசாமியின் அரசியல் பயணம் குறித்த ஒரு சிறப்புப் பார்வை…

*ரங்கசாமி பதவியேற்பு – 2 (18)*

புதுச்சேரி அரசியலில் மக்கள் முதல்வர் என்று அழைக்கப்படும் திரு. ரங்கசாமி, தட்டாஞ்சாவடி தொகுதியில் இருந்து தனது அரசியல் பயணத்தை 1990ஆம் ஆண்டு தொடங்கினார். எளிமைக்கும் – நேர்மைக்கும் பேர் பெற்ற திரு. ரங்கசாமி, 2001ஆம் ஆண்டு, காங்கிரஸ் கட்சி சார்பில் முதலமைச்சராக பதவியேற்றார்.

அதனைத் தொடர்ந்து, 2006ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று 2ஆவது முறையாக காங்கிரஸ் கட்சி சார்பில் முதலமைச்சராக பதவியேற்றார். அதன் பின்னர், உட்கட்சி பூசல் காரணமாக, 2008ஆம் ஆண்டு தனது முதலமைச்சர் பதவியை ராஜினா செய்த அவர், என்.ஆர்.காங்கிரஸ் கட்சியைத் தொடங்கினார். 2011ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், தனித்து போட்டியிட்டு, பெரும்பான்மை பலத்துடன் 3ஆவது முறையாக முதலமைச்சராக பதவியேற்றார்.

பின்னர், 2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில், தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் 4ஆவது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்ற அவர், தற்போது நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், வெற்றி பெற்று மீண்டும்

தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் 5ஆவது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ளார். புதுச்சேரி வரலாற்றில் அதிக முறை முதலமைச்சராக பதவி வகித்த பெருமை என்.ஆர்.காங்கிரஸ் தலைவர் திரு. ரங்கசாமியையே சேரும்.

***மோடி வாழ்த்து (9)***

புதுச்சேரி முதலமைச்சராக பதவியேற்றுள்ள திரு. ரங்கசாமிக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார். தனது பரந்த அனுபவத்தால் புதுச்சேரியின் வளர்ச்சிப் பயணத்தை வலுப்படுத்திய ஒரு திறமையான நிர்வாகியாக திரு. ரங்கசாமி, அழியாத முத்திரையை பதித்துள்ளார் என்று பிரதமர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மக்களின் நலனுக்காக அவருடன் இணைந்து பணியாற்ற தாம் ஆவலுடன் இருப்பதாகவும், அவரது பதவிக்காலம் மிகச் சிறப்பானதாக அமைய தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாகவும், பிரதமர் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

***காப்பீடு (16)***

புதுச்சேரி முதலமைச்சராக பதவியேற்ற பின், திரு. ரங்கசாமி, சட்டப்பேரவை வளாகத்திற்கு வருகை தந்தார். அவருக்கு காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அலுவலகத்திற்குச் சென்ற அவர், 17 புதிய திட்டங்களுக்கான கோப்புகளில் கையெழுத்திட்டார். முக்கியமாக, மஞ்சள் குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு, முதலமைச்சரின் காப்பீடு திட்டத்தின் கீழ், 3 லட்சம் ரூபாய்க்கான மருத்துவ காப்பீடு, கதிர்காமம் இந்திரா காந்தி அரசு மருத்துவ கல்லூரி வளாகத்தில், உயர்தர நமோ புற்றுநோய் மருத்துவமனை உள்ளிட்டவை அடங்கும். அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர், மக்களுக்கு தொடர்ந்து பணியாற்றுவதற்கு கிடைத்த வாய்ப்பு தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாகத் தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியை விரைவில் சந்தித்து பேசஉள்ளதாக தெரிவித்த அவர், மஞ்சள் நிற குடும்ப அட்டை வைத்திருக்கும் மகளிருக்கு உரிமைத் தொகை மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் விரைவில் கொண்டு வரப்படும் என்றார். கடந்த ஆட்சியில் செயல்படுத்திய நலத் திட்டங்களால் பயனடைந்த மக்கள் மீண்டும் தங்களை ஆட்சியில் அமர்த்தி உள்ளதாக, தெரிவித்தார்.

***ஜிப்மர் பட்டமளிப்பு (8)***

புதுச்சேரி ஜிப்மரில் செவிலியர் மற்றும் துணை மருத்துவ அறிவியில் படிப்புகளுக்கான 12ஆவது பட்டமளிப்பு விழா நாளை நடைபெறுகிறது. டாக்டர் அப்துல் கலாம் கலையரங்கில் காலை 10 மணிக்கு நடைபெறும் இவ்விழாவில், மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் செயலர் திருமதி. புண்ய சலிலா ஸ்ரீவஸ்தவா முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு பட்டமளிப்பு விழா பேருரை நிகழ்த்த உள்ளார். இவ்விழாவில், ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர்சிங் நேகி, கல்லூரி முதல்வர் டாக்டர் விக்ரம் காட்டே ஆகியோரும் பங்கேற்கின்றனர்.

***தங்கம் வரி (12)***

தங்கம் மற்றும் விலையுயர்ந்த உலோகப் பொருட்களின் இறக்குமதியை குறைக்கும் வகையில், அவற்றிற்கான இறக்குமதி வரியை மத்திய அரசு உயர்த்தி உள்ளது. அந்த வகையில், தங்கம் மற்றும் வெள்ளிக்கான இறக்குமதி வரி 5 சதவிகிதம் உயர்த்தப்படுவதாக, மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது. பிளாட்டினத்திற்கான இறக்குமதி வரி, 5.4 சதவிகிதமும், இதர விலையுயர்ந்த உலோகப் பொருட்களுக்கான இறக்குமதி வரி, 4.35 சதவிகிதம் உயர்த்தப்படுவதாகவும், அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காசியாவில் நிலவும் நெருக்கடியான சூழல் காரணமாக தங்கம் வாங்குவதை தவிர்க்குமாறு, பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்த நிலையில் மத்திய அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

*கிரிக்கெட் (3)*

ஐபிஎல் கிரிக்கெட் போட்டித் தொடரில், ராய்ப்பூரில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில், பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ் அணியும், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் விளையாடுகின்றன.

*வானிலை (10)*

தென்மேற்கு வங்கக் கடல் மற்றும் அதனையொட்டிய மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக, மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், தமிழக கடலோரத்தின் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும், இன்று, இடி – மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும், அடுத்த 5 நாட்களுக்கு தென் தமிழக கடலோர மாவட்டங்கள், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனையொட்டிய மாவட்டங்களின் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் லேசான மழை பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, தனது பாதுகாப்பு வாகனங்களின் எண்ணிக்கையை குறைக்க உத்தரவிட்டுள்ளார்.

பிரிக்ஸ் உறுப்பு நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாடு நாளை, புதுடெல்லியில் தொடங்குகிறது.

தமிழ்நாட்டில், திரு. ஜோசப் விஜய் தலைமையிலான அரசு, நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றது.

புதுச்சேரி முதலமைச்சராக என்.ஆர்.காங்கிரஸ் தலைவர் திரு. ரங்கசாமி, 5ஆவது முறையாக இன்று பதவியேற்றார்.